**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.12/2024**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வி | மதம் | : இந்து |
| க/பெ | : தட்சிணாமூர்த்தி | ஜாதி | : -- |
| வயது | : 48 | கிராமம் | : முதூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : அரக்கோணம் |

**11.08.2025**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கு சொத்திற்கான செட்டில்மெண்ட் பதிவேடு சான்றிட்ட தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் பதிவேடு வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.132ல் என் அப்பா குலசேகரன் பெயரில் உள்ள பட்டா தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)